கடவுள் துணை.

பிரஜாநுகூலன்

கமலம். ௩௪	திரிச்சி: ஆகஸ்டு௴ 193[illegible].	இதழ். 1.

ஆநந்த தரிசனம்

"ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்" ணாயிருப்பது நன்று. நமக்குப் பலவித லௌகிக காரியங்களிருந்தாலும், எப்போதும் பகவானையே நினைத்துக்கொண்டிருக்கவேண்டும். அதற்காக நமது முன்னோர்கள் செய்திருக்கும் சிறந்த யுக்தியைப் பாருங்கள். மனுஷ்யன் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போதே 'ஹரி ஸ்ரீஹரி' என்று எழுந்திருக்க வேண்டுமாம். இதனால் பகவானுடைய நினைவு வருகிறது. பிறகு குளிரைப் பாராட்டாமல் நதிகட்கு ஸ்நானம் செய்யச் செல்லும்பொழுது பகவந் நாமங்களைச் சொல்லிக்கொண்டே போகவேண்டும். அதன் பின்னர் ஆற்றில் ஸ்நானம் செய்யும்போதும் பரமாத்மாவைத் துதிக்கவேண்டும். பிறகு சந்தியாவந்தனம் ஜெப முதலியவற்றிலும் பகவானுடைய ஸ்மரணையே மிகுந்திருக்கின்றது. வீட்டிற்கு வந்தவுடனே பூஜை யாரம்பம். அது ஆனவுடனே கிரந்த பாராயணம், இவைகளெல்லாம் முடிந்தவுடன் போஜனம். இந்த சமயத்திலும் பகவானை ஸ்மரித்தே பிறகு அன்னத்தைப் புசிக்கவேண்டும். போஜனமான பிறகு வேதாந்த கிரந்தங்களைப் படித்துக்கொண்டிருப்பது. பிறகு மாலையிலும் பகவத் சிந்தனை. இரவு ஸயனிக்கும்போதும் பகவானை தியானித்த பின்னரே உறங்க வேண்டு மென்பர்' நமது முன்னோர்களின் வழியையே பின்பற்றி நாமும் பகவானைத் துதிக்கக் கடவோம்.

ஃ ஃ ஃ

"தேக சுத்தம் மனோ சுத்தம்" இரண்டும் ஒன்றுக்கொன்று துணை, தேகம் சுத்தமானாலன்றி மனோ சுத்தம் எற்படாது. தேக சுத்தத்திலும் மனோ சுத்தம் அதியவசியம். சிலர் மனதை சுத்தப்படுத்தாமல், நடத்தையைத் திருத்திக் கொள்ளாமல் சும்மா உட்கார்ந்து பகவந் நாமங்களைச் சொல்வர். இவ்விதம் கோடி வருஷங்கள் உச்சரித்துக் கொண்டிருந்தாலும் மோக்ஷம் சித்திக்காது. பாத்திரத்தின் உள்ளேயிருக்கும் களிமண்ணையும் அழுக்கையும் தேய்க்காமல் மேற் பாகத்தைமட்டும் சுத்தி செய்து உள்ளே பாலை ஊற்றிவைத்தால் அந்தப் பால் சிலாக்யமாகுமா? அதில் களிம்பேறாதா? அழுக்கு படியாதா? அப்பால் தேகத்தக்கு நோயைக் கொடுக்காதா? அது போல், பிறர் மதிக்கட்டுமென்றோ, வேறு எந்த அசட்டு நம்பிக்கையாலோ அசுத்தமாயிருந்தபடியே பகவந்நாமங்களை ஸ்மரித்துக் கொண்டு, வேண்டிய அகிருத்யங்களைச் செய்வோர் ஒருபோதும் தங்கள் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளார். இவர்கட்கு பக்தி யிருப்பினும், அதை சரியானபடி உபயோகியாததால் பலன் உண்டாகிறதில்லை.

ஃ ஃ ஃ

"காகமும் உறவு கலந்துண்ணும்" காகத்தின் உத்தமமான குணம் யாதெனில், அது எந்த வஸ்துவையும் தானே புசிக்காமல் தன்னினத்தார்களுடன் உண்பதே. நாயின் கெட்டகுணம் தன் ஜாதியில் விசுவாசமற்றிருப்பது. தன் மதத்தைச் சேராதவர்களுடனும் ஸந்தேகிக்கக் கூடியவர்களுடனும் பந்தி போஜனம் செய்வது பிசகு. தான் வீண் கர்வத்தால் தன்னை உயர்ந்தவனாக எண்ணிக்கொண்டு திரையைப் போட்டு ஒளி மறைவாயுண்ணுவதும் அவலக்ஷணமே. பகவத் பக்தர்களின் கோஷ்டியிலும் தேசபக்தர்களின் திருக்கூட்டத்திலும் ஜாதிபேதமில்லை. மனம் நல்லதாயின் எதுவும் நல்லதே.

ஃ ஃ ஃ

"ஸ்வாமி விவேகானந்தர்" இவர் முன்னாளில் கங்கைக் கரையில் ஜ்வலித்துக் கொண்டிருந்த தீபமாவர். அம்மகானுடைய தேகம் அழிந்த போதிலும், அவருடைய புத்திப் பிரகாசமும் ஆத்ம ஜோதியும் அழியவில்லை; மங்கவில்லை; அவை முன்னிலும் அதிகமாய்ப் பிரகாசிக்கின்றன. மகா விவேகியும் தைர்யசாலியுமான ஸ்வாமிகளிடமிருந்து பிரசங்க ரூபமாய்ப் புறப்பட்ட வேதாந்த மென்னும் பிரவாக மானது, இமயமலையிலிருந்து உற்பத்தியாகிப் பனிக்கட்டிகள் கரைந்து வழியப் பெருகி யோடி ஜில்லென்றிருக்கும் கங்காநதியைப் போல் பற்பல கண்ட வாஸிகளின் உள்ளத்தையும் குளிரச் செய்து அவர்களுக்கு ஞானம் என்னும் நற்பலனைக் கொடுத்திருக்கிறது. நிர்ப்பயமாய் ஹிந்து மத உண்மைகளை எடுத்துரைப்பதில் அவருக்கு ஸமமாக யாரையும் சொல்லமுடியாது. முன்னோர்களின் ஆசார சம்பிரதாயங்களைக் கண்டிக்கும் தன்மை அவரிடமில்லை. பற்பல உட்பிரிவுகளையுடைய ஹிந்துக்களின் கொள்கைகளெல்லாவற்றையும் ஆதரித்துப் பேசி எதிராளியை வாயெடுக்க வொட்டாமற் செய்யும் தன்மையும் திறமையும் ஸ்வாமிகளிடம் விசேஷமாயுண்டு. ஸ்வாமிகளுக்கு அமைந்த வாக் சாதுர்யத்தையும் காம்பீர்யத்தையும் தைரியத்தையும், கண்டு வியப்புறாத வெள்ளைக்காரரில்லை. இன்ன தெய்வத்தை வணங்கென்றும், இன்னாரை ஆசாரியராகக் கொள் என்றும் அவர் சொல்லவேயில்லை. மனிதன் தன்னை இன்னானென்று அறியவேண்டு மென்பதே அவருடைய கோரிக்கை. அவர் அடிக்கடி கூறும் வாக்கியங்களாவன:—"விழித்துக் கொள், எழுந்திரு, நில்லாதே, உன்னுடைய காரியம் நிறைவேறும் வரை உழைத்துக் கொண்டிரு" என்பதாம்.

ஃ ஃ ஃ

"துராபிமானம்" ஒருவன் பரம துஷ்டனாயிருந்தும் அவன் மீதுள்ள அபிமானத்தால் மன்னிக்க நேரிடுகிறது. தம்மக்கள் நாஸ்திக வாதம் செய்து மத நிந்தனை புரிகையில் பெற்றோர் உடனே சிக்ஷியாமல் கேட்டுக் கொண்டிருப்பது துராபிமானத்தையே குறிக்கும். மதப்பற்று மக்களுடன்வளரும்படி செய்ய வேண்டும். சிறு வயதிலேயே பாலக பாலகிகட்குப் பெற்றோர்கள் மத விசுவாசம் உண்டாகும்படி புத்தி போதிப்பது அவசியமாகும். சிலர் சோம்பலை மேற்கொண்டு யாதொரு முயற்சியும் செய்யாமல் ஸ்வாமியின்மேல் பழியைப் போடுவர். மனுஷ்யன் வருந்திச் செய்யும் முயற்சியின் வழியிலேதான் பகவானும் தமது கடாக்ஷத்தை வீசுவார். ஆதலின், நாம் ஓயா முயற்சியுடையோராய் பகவானுடைய அருளுக்குப் பாத்திராகக் கடவோம்.

தன் வினையால் நாட்டின் தொழிலை உயர்த்திய இளைஞன்.

பதினேழாவது நூற்றாண்டின் கடைசியில் இங்கிலாந்திலே ரிச்சார்டு பாலி என்று ஒருவன் இருந்தான். அவனுடைய தந்தை மிகவும் எளியவனாய்ச் சிறிது பூமி வைத்துக்கொண்டு அதைத் திருத்திப் பயிர் செய்து கஷ்டப்பட்டு ஜீவனம் செய்து வந்தான். ஆதலின், மகனாயினும் ஏதாவது ஒரு கைத்தொழில் கற்றுச் சுகமாக வாழட்டுமென்று அவன் இருப்பாணிகள் செய்யும் ஒரு தொழிலாளியிடம் தன் மைந்தனை வேலை கற்றுக் கொள்ளும்படி விட்டு வைத்தான். அச்சிறுவன் நல்ல புத்திசாலி; மிகவும் உழைப்பாளி. தன் எஜமானிடத்தில் கிரமமாகவே அடங்கி யொடுங்கி உடம்பு வணங்கி இரண்டொரு வருஷக்காலம் அவனிட்ட வேலைகளைத் தவறாமற் செய்து கொண்டு வந்தான். இப்படி யிருக்க, நாளளவிலே அந்த வர்த்தகம் விருத்தி யடையாமல் வரவர க்ஷீணிக்கலாயிற்று. கடைசியில் தொழிற்சாலையே மூடப்பட்டுப்போனது.

ரிச்சார்டுக்கு சங்கீதத்தில் அதிக விருப்பமானதால், ஓழிவு நேரங்களில் கின்னர வாத்தியமும் கையுமாய்ப் பாடிக்கொண்டு தன் பிழைப்புக்கு என்ன செய்வதென்ற கவலையோடிருக்கையில் தான் வேலை செய்துகொண்டிருந்த தொழிற்சாலையின் எஜமானனைக் கண்டான்.

ரிச்சார்டு :—இத்தேசத்தில் ஆணி வர்த்தகம் இப்படி ஈன ஸ்திதிக்கு வந்ததற்குக் காரணம் என்ன ஐயா?

எஜமானன் :—ஸ்வீடன் தேசத்திலே ஆணிகள் வெகு நயமாயும் சுலபமாயும் செய்ய வேண்டிய வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பெரிய இருப்புக் கம்பிகளை ஆணிகளுக் கேற்றபடி சிறிது சிறிதாக வெட்டும் இயந்திரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவ்வேலைகளை யெல்லாம் நாம் கையினாலே தானே செய்து தீர வேண்டும்? ஆதலின், அவர்கள் நம்மை விட வெகு விரைவில் அநேகம் ஆயிரம் ஆணிகளைச் செய்து சுலபமான விலைக்கு விற்றுப் போடுகிறார்கள். நமது கைவேலை மெதுவிலே முடிகிறதாகையால் அவர்களைப்போல அப்படிச் சொற்ப விலைக்கு விற்க நமக்குச் சாத்தியப்படவில்லை. நமது தொழிலின் க்ஷீணிப்புக்கு இதுதான் காரணம்.

ரிச்சார்டு :—அப்படியானல், நாமும் அவர்களைப்போல ஏன் ஒரு யந்திரம் செய்து கொள்ளக்கூடாது? இதற்காக நாம் வர்த்தகத்தைக் கைவிடலாமா?

எஜமானன் :—கூடுமானல் நாமும் ஒரு யந்திரம் அவசியம் செய்து கொள்ளலாம் தான். ஆனல், அந்த யந்திரத்தின் சொரூபம் இப்படிப்பட்டதென்று இங்கே ஒருவருக்கும் தெரியவில்லையே. ஸ்விடன் தேசமோ சமீபத்திலில்லை. வெகு தூர நாடு. யாராவது ஒருவன் கஷ்ட நஷ்டங்களுக்கு உடன்பட்டு ஒருவேளை அத்தேசத்திற்குப் போவதாய் ஒப்புக்கொண்டாலும், அங்குள்ளோர் அந்த யந்திரத்தைப் பார்க்க இடங் கொடுப்பதில்லை. அப்படியே அநேகர் நெடுந்தூரம் யாத்திரை செய்து அத்தேசம் போனர்கள். போய்ப் பயனென்ன? அங்குள்ள யந்திரசாலைக்குள் ஒருவரும் போய்ப் பார்க்கக் கூடாதென்று மறுத்து விட்டார்கள். அவர்கள் தாம் கண்டு பிடித்த நுட்பத்தை அவ்வளவு இரகசியமாக வைத்துக் கொண்டிருக்கிருர்கள். சரக்கு விலைபடுத்துவதற்கு, அச்சரக்கு யாவர்க்கும் உபயோகமாயிருப்பது ஒன்று மாத்திரமே போதாது. அதனேடு அதன் விலையும் நயமாயிருக்கவேண்டும். ஆணிகள் கையால் செய்யப்படுவதுபோய், அவை யந்திரங்களின் மூலமாய் மிகுதியாகச் செய்யப்படுமாயின், அவற்றின்விலை மிகவும் ஸரஸமாகும்; நாலா பக்கத்திலுமுள்ள ஜனங்கள் நான் நான் என்று அவற்றை வாங்கிக்கொள்ள ஓடி வருவார்கள். நமக்கு யந்திர மில்லையே! நாம் என்ன செய்கிறது?

இந்த ஸம்பாஷணைக்குப் பிறகு ரிச்சார்டு எங்கேயே போய் விட்டான். பல மாதங்களாகியும் அவன் சென்ற இடமே தெரியவில்லை. பிறகு திடீரென்று வந்து முளைத்தான். தன் எஜமானனின் ஸம்பாஷணையைக் கேட்டது முதல் அந்த இரும்பு யந்திரத்தை எப்படியாவது தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் அவனுக்கு உதித்து அந்த ஆசையுடனே ஒருவரிடமும் சொல்லாமல் தன் வாத்தியத்தையே தனக்குத் துணையாகக் கொண்டு ஸ்விடன் தேசத்துக்குப் போய்விட்டான். அவன் போன சங்கதி எவருக்கும் தெரியாது. ஸ்விடன் தேசத்து ராஜதானியாகிய ஸ்தாகோம் நகரத்துக்குச் சென்று அந்த நகரத்தாரையெல்லாம் தன் வாத்தியத்தினலேயே வசப்படுத்திக் கொண்டான். அவ்வண்ணமே தான் கருதிய இரும்பு யந்திரங்கள் வேலை செய்யும் தொழிற்சாலைக்கும் போய் அங்குள்ளவர்களையும் தன் வாத்தியத்தால் வசப்படுத்திக் கொண்டு, அதற்குள் தனக்கு இஷ்டமானபடி சஞ்சரிக்க அனுமதியும் பெற்ருன். அதனுள் வேலை செய்யும் தொழிலாளிகளெல்லோரும் தன்னுடன் சிநேகம் பாராட்டி நடக்கவும் வசதி தேடிக்கொண்டான். அந்த யந்திர சாலைக்குள், சில வேளையில் யந்திரத்தின் பக்கத்திலே கூட, உட்கார்ந்து போஜனம் செய்யும்போது அத்

தொழிலாளிகளுடன் தானும் அண்டையில் உட்கார்ந்து வீணை வாசிப்பான். அவ்விதம் வாசிக்கும்படி அவர்களே வேண்டுவார்கள். அதுதான் தனக்கு நல்ல தருணமென்று அச்சமயங்களில் தான் அந்த யந்திரத்தின் மேலேயே கண் வைத்து அதன் நுட்பங்களையெல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டான், அப்படியே விடாமல் பல நாள் பார்த்துப் பார்த்து அதைப் பற்றிய எல்லா விஷயங்களையும் நன்றாய் மனதில் பதிய வைத்துக்கொண்டு, போனபடியே திரும்பி, கப்பலில் ஒரு சிறு வேலைக்காரனாய் அமர்ந்து, வாடகை யில்லாமலே கப்பலேறிக் கடலைக் கடந்து தரைவழி யெல்லாம் காலால் நடந்துவந்து, மறுபடி இங்கிலாந்து வந்து சேர்ந்து தன் செய்திகளை யெல்லாம் கூறினான். அனைவரும் அதிசயித்தனர்.

பிறகு ரிச்சார்டு சொல்லியபடியே இரும்பு வேலைக்கு ஏற்ற யந்திரம் ஒன்று செய்து முடிக்கப்பட்டது. அந்த யந்திரம் பார்வைக்கு வெகு விசித்திரமாயிருந்தது. யாவரும் அதைக் கண்டு வியந்தார்கள். ஐயோ! இவ்வளவு வருத்தப்பட்டுப் பார்த்து வந்து செய்தும் கடைசியில் அந்த யந்திரம் காரியகாரி ஆகவில்லை. அது பார்வைக்கு மட்டும் அழகா யிருந்ததே யொழிய வேலைக்கு உதவவில்லை. எவ்வளவு வருத்தப்பட்டுப் பார்த்தும் அதை உபயோகப் படுத்த ஒருவராலும் ஆகவில்லை. அதைக் காணவே ரிச்சார்டுக்கு வெகு வெட்கமாய்ப் போயிற்று: பார்த்தவர்களெல்லாம் அவனைப் பரிகாசம் பண்ண ஆரம்பித்தார்கள். அவன் கொழுப்பு அடங்கியதென்று சந்தோஷித்தார்கள். சம்பாதிக்காத மனிதனும், மலடியான பெண்ணும் அழகாயிருந்து பயனென்ன? அந்த யந்திரத்துக்கு இன்ன பரிகாரம் செய்வதென்று தோன்றாமல் ரிச்சார்டு, எப்படியாவது இவர்களின் முகத்தில் விழியாமல் இவ்வூரை விட்டு ஓடினால் போதுமென்று, ஒருவருக்கும் தெரிவியாமல் மறுபடி ஒருநாள் ஓடிப் போய்விட்டான். அது கண்டு அவ்வூராரெல்லாம், அந்த மட்டும் அவனுடைய ஆணவத்திமிர் அடங்கிற்றென்றும், இனி, அவன் இந்த முகம் திரும்பமாட்டா னென்றும் பரிகசித்துப் பேசி நகைக்கலாயினர், உழைப்பாளியின் சிறு தவறுதலுக்கும் இகழ்வதே எங்கும் வழக்கம்.

ஆயினும், அவர்கள் நினைத்தபடி அவன் மறுபடி அவ்வூருக்குத் திரும்பி வராமற் போகவில்லை சில மாதங்கள் கழிந்த பிறகு முன் போலவே அவன் திரும்பி ஊர்வந்து சேர்ந்து முன் சொன்ன கதைகளைப் பார்க்கிலும் புதுமையான தனது கதைகளைச் சொல்ல ஆரம்பித்தான். மறுபடியும் முன் போலவே அவன் ஸ்வீடன் தேசத்துக்குப் போயிருந்தானாம். அங்குள்ள இரும்பு வேலைக்காரர்களெல்லாம் தாங்கள் நெடுநாளாய்ப் பாராதிருந்த தங்கள் நேசன்

மறுபடி வரக்கண்டு காணாதது கண்டதுபோல உடம்பு பூரித்து, தங்களை விட்டுப் பிரியாதிருக்கும்படி எப்போதும் அவனைத் தங்களோடு கூடவே வைத்துக் கொண்டிருந்தார்கள். அத்தருணங்களில் ரிச்சார்டு அங்குள்ள யந்திரத்தண்டை போய் நின்று அதை நன்றாக உற்றுப்பார்த்து, தன் யந்திரத்திலுள்ள குறைவு இன்னதென்பதைக் கண்டு கொண்டு சீக்கிரம் தன்னூருக்குத் திரும்பினான்.

ஊர் வந்து சேர்ந்தவுடனே உபயோகமற்றதென்று மூலையிலே எறிந்து கிடந்த யந்திரத்தை எடுத்து ரிச்சார்டு செம்மைப்படுத்தி, அதிலுள்ள குறைப்பாட்டை நீக்கி வேலைக்கு உபயோக மாகும்படி செய்து விட்டான். யந்திரம் வெகு விநோதமாய்ச் சுழல ஆரம்பித்தது. அதைக் காணவே இரும்பு வேலைக்காரர்களுக்கெல்லாம் அளவற்ற சந்தோஷ முண்டாயிற்று. பிறகு அவர்களுடைய வர்த்தகம் தலை யெடுத்து வர வர மேலோங்கலாயிற்று. ரிச்சார்டும் பேரும் புகழும் பெற்றுச் செழித்தோங்கலானான்.

பின்பு சில வருஷங்களுக்குள் அவன் மிகத் தேர்ச்சி பெற்றவனாகி, அவ்விடத்திலுள்ள இரும்புச் சாமான் செய்யும் தொழிற்சாலைத் தலைவர்களுள் ஒருவனாகி, தன் வாழ்நாளில மிகுந்த பொருள் சேகரித்ததுமல்லாமல், அவ்விடம் எங்கும் வியாபாரங்கள் பல வகையிலும் விசேஷமாக விருத்தி யடையும்படியாகவும் செய்தான். ரிச்சார்டுக்குத் தொழிலில் இருந்த ஊக்கமும் இடைவிடா முயற்சியுமே அவனது உயர்வுக்குக் காரணமாயிற்று.

ஒரே பத்திரிகையானாலும் அதற்கு ஏற்படுகிற பத்திரிகாசிரியர்களுக்குத் தகுந்தபடி அதன் நடை, உருவம், அமைப்பு யாவும் மாறிவிடுகிறது. ஒரு ஆசிரியரின் அமைப்பு மற்றொரு ஆசிரியருக்கு உண்டாவதில்லை. உதாரணமாக, "லோகோபகாரி" பத்திரிகை அதன் ஸ்தாபகரமான முதல் ஆசிரியர் ஸ்ரீ. வி நடராஜ ஐயர் காலத்தில் ஒரு தினுசு; பிறகு பண்டிதை விசாலாக்ஷியம்மாளின் காலத்தில் இன்னொரு விதம்; அப்பால் ஸ்ரீ வடிவேல் செட்டியார் நாளில் வேறொரு மாதிரி; இப்போது ஸ்ரீ நெல்லையப்பரின் கீழ் மற்றொரு மாதிரியாய் நடை பெறுகிறது.

கல்வியினால் அறிவு வளர்ச்சி ஏற்பட வேண்டும். அறிவு முதிர்ச்சியால் தன்னடக்கமும், சஞ்சலமற்ற புத்தியும் உண்டாகி அதனால் ஆத்ம சாந்தி ஏற்படவேண்டும். அண்ட கோளங்களெல்லாம் நம்முள் அடங்கி யிருக்கின்றன. நம்முள்ளே அறிவுப் பிரகாசமும் இருக்கிறது. அவ்வறிவுப் பிரகாசத்தை மறைத்து நம்முள்ளிருக்கும் சத்தியை நாம் பார்க்கவொட்டாமல் செய்ய நம்முள் ஆசைத் தீக்களும் இருக்கின்றன. அவ்வாசைத் தீயை யடக்கி, அறிவுப் பிரகாசத்தைப் பெருக்கி விசாலித்த ஞானம் பெறவேண்டும்.

மேலே சென்றவர் திரும்புவதில்லை.

ஒரு அரணியத்திலுள்ள அழகிய தாமரைத் தடாகத்தில் நீர் வண்டுகள் பல வாஸம் செய்து கொண்டிருந்தன. ஒருநாள் அவற்றில் ஒன்று, இத் தடாகத்திலே நம்முடன் கூடிக் குதித்து விளையாடிக் கொண்டிருக்கின்ற தவளை திடீரென்று எழும்பி மேலே எங்கேயோ போகின்றது; பின்னும் சில நேரத்துக்கெல்லாம் நமக்குத் தெரியாமலே நமது பக்கத்தில் வந்து நிற்கின்றது. அது போகுமிடம் இன்னதென்று நமக்குத் தெரியவில்லையே! எங்கே போகின்றது? அவ்விடம் எத்தன்மையது? அங்கே என்ன இருக்கிறது என்ற சிந்தை யுடையதாகி விசாரப்பட்டுக்கொண்டிருந்தது. அதைப்பற்றி அங்கிருந்த தவளையைக் கண்டு கேட்க, அது, இப்போது நாம் இருக்கும் உலகம் தண்ணீர் எனப்படும். இதற்கு மேலுள்ளது ஆகாய மென்பார்கள். சூனியமான இடமே ஆகாயமென்று சொல்ல வேண்டுமென்றது. தவளை கூறியதில் எதுவுமே வண்டுக்கு விளங்கவில்லை. அதன் அறிவுக்கு மேற்பட்ட விஷயத்தை அது எப்படி அறிய முடியும்?

இதுவே விசாரமாகக் கிடந்த வண்டுக்கு ஜலத்தைவிட்டு வெளியே செல்லவேண்டிய பருவகாலம் வந்தது. அது நான் மேல் உலகத்திற்குப் போகிறேன். போய் எல்லா அதிசயங்களும் கண்டு கொண்டு திரும்பி வந்து உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றது. மற்ற வண்டுகள் நீ மேலுலகம் போனதும் எங்களை யெல்லாம் மறந்து போவாயோ என்று கேட்க, அதற்கு வண்டு ஒருபோதும் மறக்க முடியாது என்று சொல்லிற்று. பிறகு, போய் வருகிறேன் என்று எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு மேலே சென்றது. மேலே போய் அது எவ்வித மாகிறதோ பார்க்க வேண்டுமென்று அதன் அருமைச் சகோதரர்களும் நேசர்களுமான சில துணிந்து அதைப் பின்தொடர்ந்து போயின ஆயினும், அது தண்ணீரை விட்டு மேலே கிளம்பிப் போகும்போது ஒன்றுவது அதைப் பார்க்கவில்லை. குளக்கரை யோரத்திலுள்ள கோரையைப் பற்றிக்கொண்டு தண்ணீரின் மேற்புறம் போமளவுந் தான் அது அவற்றின் கண்ணுக்குப் புலப்பட்டது. அப்புறம் தென்படவேயில்லை. தண்ணீரில் இருக்கிற பொருளை மாத்திரம் பார்க்க அவற்றிற்குத் திறமை யுண்டே யன்றி, அதற்குமேல் ஆகாயத்திலுள்ள பொருள்களைப் பார்க்கச் சிறிதும் திறமையில்லை. அதனால் அவை மோசம் போனோமே யென்று மனங் கலங்கித் திரும்பித் தம்மிடம் போய்ச் சேர்ந்தன. மேலே போன வண்டு நடுப்பகலில் திரும்பி வருமென்று எதிர்பார்த்தும் இரவில் கூட அது திரும்பி வரவில்லை. அது நம்மை மறந்து போய் விட்டதென்று நினைத்துக் கொண்டன.

மேலே வந்த வண்டு புதிய ஆகாயத்தைப் பார்த்து மகிழ்ந்து விட்டு பிறகு தண்ணீருக்குள் புகுந்து தன் நேசர்களோடு சேர முயன்றது. ஆனால் முடியவில்லை. தகுந்த காலம் வருமளவும் தண்ணீருக்குள் உள்ள பூச்சிக்கு மேலே ஆகாயத்தில் எழும்பிப் போக எப்படித் திறமையில்லையோ, அப்படியே, மேலே போன வண்டுக்கும் திரும்பித் தண்ணீருக்குள் நுழைந்து உட்செல்லத் திறமையில்லாமற் போயிற்று. தண்ணீரின் மேற்புறத்தைத் தொடும்போதே அதற்கு உடம்பில் நடுக்கமுண்டாயிற்று.

மேலுலகத்திற்குப் போனபின்பு, மறுபடி திரும்பிக் குளத்திற்குள் புகுந்து செல்வது மிகவும் தனக்குக் கூடாத காரியமென்று கண்டவுடனே, அந்த வண்டு இது தெரியாமல் தான் திரும்பி வருவதாக வீணாய்ச் செய்துவந்த உறுதிமொழியை நினைத்து நினைத்து ஏங்கியது. இவ்வித மிருக்கையில் அதன் தம்பியாக மற்றொன்று பறக்கப் பருவம் வந்து விட்டதால் ஜலத்திலிருந்தும் மேலே கிளம்பிற்று. அதைக் கண்ட இதற்கு முதலில் எழுந்த தும்பி அது தனக்கு நல்ல துணையாயிற்றென்று மகிழ்ந்தது. இவ்விதமே மேலே எழுந்து வந்தவைகளோடு மேலுலகத்தில் அது வாழ்ந்தது. மற்றவைகள் தண்ணீருக்குள் வாழ்ந்தன. தண்ணீரிலிருந்து மேலுலகம் சென்றவை மறுபடியும் தண்ணீரிலுள்ளவற்றைச் சந்திக்கவில்லை. சந்திக்கவும் திறமையில்லாது போயிற்று. மேலுலகம் சென்ற மனிதர்களும் இப்படியே திரும்பி வருவதில்லையல்லவா?

நல்ல சாப்பாட்டுராமனுக்கே தான் எங்கே "ருசித் தவறு"—"சுவைக் குறைவு" இருக்கிறதென்று தோன்றும். மற்றவர்கள் நூல்களை மடமடவென்று படித்து முடித்து விடுவரேயன்றி இன்ன இடத்தில் இன்ன குறை "ருசித்தவறு" என்று தெரிவிப்பதற்கு அறியார். புத்திமானுக்கு அந்த ருசித் தவறு இருக்குமிடம் வலியவே—அந்த புஸ்தகமே தன் பக்கங்களைத் திறந்து இன்னின்ன இடத்திலிருக்கிறதென்று காட்டிவிடும். அந்த இடங்கள் தாமாகவே தற்செயலாகக் கண்கட்கு எதிர் பட்டுவிடும்.

தங்களின் உள்ளுணர்ச்சிகளை வெளியிட முடியாத நிலையில் இருப்போர் எந்த சமயத்தில் என்ன விதமாய் மாறுவரோ சொல்வதற்கில்லை. வேண்டுமென்றே தங்களின் எண்ணங்களை வெளியிடாதிருப்பவர் வேறு. வெளியிடும் தருணம் வாய்க்காமலே உள்ளங் கொதித்து நிற்பவர் வேறு. இவ்விருவரையும் குடும்பத்தலைவன் பிரித்து அறிவது கஷ்டமாகிறது.

உண்மைச் சாந்தியை அடைய மனிதன் நற்குண ஸம்பன்னனாய் இருக்கவேண்டும். வாழ்வின் முடிவான லக்ஷியம் ஆத்மஞானம் பெறுவதே. நாம் செய்யும் ஒவ்வொரு செய்கையும் அந்த ஞானத்தைப் பெற உதவுவதாக இருக்கவேண்டும்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகட மாமா

அனுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆனந்தம்

தனிகரின் மேன்மையே ஏழையின் பெரிய லாபமப்பா!



மாமாவின் விகடஞானம் எப்போது வெளிவருமென்று காத்துக் கொண்டிருக்கும் என் விநோத விகட உலகத்தின் குடிபடைகளே! என் நஞ்சான் குஞ்சான்களே! நீங்கள் வாழ்க. விகடமாமாவை என்றைக்கும் ஆதரியுங்கள். ஒவ்வொரு மாதமும் தவறாமல் வாங்கிப் படியுங்கள். உங்களுக்கு வேண்டிய சிரிப்புகளும், விகடங்களும் அனுபவங்களும், ஞான உணர்த்துதல்களும் மாமா வேண்டிய வரையில் வாரிக்கொண்டு வந்து தருகிறேன். இப்போது மேலே விகட ஞான வாக்கியம் ஒன்று காட்டியிருக்கிறேனே! "தனிகரின் மேன்மையே ஏழையின் லாபமப்பா!" என்று சொல்லியிருக்கிறேனே! அது என்ன தெரியுமா அப்பா! அது ஒரு பெரிய அனுபவ ஞானம் அய்யனே! எங்குமே எப்போதுமே தனிகரென்று ஒரு ஏற்றமில்லை! தரித்திரரென்று ஒரு தாழ்வில்லை! இதைப்பற்றி மாமா என் விகட ஞானவழியாக அதை ஒரு கதை மாதிரியாகவே இங்கே எழுதி விளக்கிக் காட்டுகிறேன். கேட்கிறீர்களா என் மருமகப்பிள்ளைகளே! கேளுங்கள்!

ஃ ஃ ஃ

அவன் ஓர் ஏழைக்குடியானவன். அவன் பெயர் முத்துசாமி. அவன் ஓர் பெருங் குடும்பி. அன்றாடம் அவன் உழைத்துக்கொண்டு வருகிற சொற்ப கூலியிலே தான் அந்த குடும்பம் முழுதும் ஜீவிக்க வேண்டும். அதனால் அவன் மிக மனத்துயரமுற்று என்னுடைய எஜமானன் வெகு சௌக்கியமாகச் சிறந்த ஆடையாபரணங்கள் அணிந்து பெரிபவாகனங்களில் ஏறிச்செல்வது முதலியபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்க, நாங்கள் இப்படி வயிற்றுக்குச் சோறுகூடச் செம்மையாய்க் கிடைக்காமல் தவித்துக்கொண்டிருப்பது நியாயம் தானா? தனவான்கள் தம்முடைய பொருளை வீண் போகங்களுக்காகச் செலவழித்து சந்தோஷித்திருப்பது மிகவும் பிசகு. அந்தப் பொருளையெல்லாம் என்னைப்போன்ற எளியவர்களுக்கு

உண்டி உடைகளுக்காக உபயோகப்படுத்தினால் எத்தனை நலமாயிருக்கும்? ஆதலால், இவ்விஷயத்தில் நீ எனக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொல்லித் தன் இஷ்ட தேவதையை வேண்டிக் கொண்டான். அது கேட்டு அந்தத் தேவதை, ஆம், இது எனக்கும் பரிதாபமாய்த் தான் இருக்கிறது. என்னால் இயன்றளவு நான் உனக்கு உதவி செய்யச் சித்தமாயிருக்கிறேன். தனவான்களுடைய சிறந்த ஆடை ஆபரணம் வாகனம் வேலைக்காரர்கள் முதலிய போகசாதனங்களெல்லாம் உனக்கு மிக வருத்தமுண்டாக்குகின்றன வாகையால், அவற்றையெல்லாம் நான் என் மந்திரதண்டத்தினால் அழித்து விடட்டுமா என்று வினவ, முத்துசாமி, உனக்கு என்னிடத்தில் இவ்வளவு தயவிருக்குமாயின், வீண் போகங்கள் எல்லாவற்றையும் முற்றும் அழித்து விடுவதே உத்தமமாம். அப்படியின்றி நீ சொல்லுகிற ஏதோ சில போகங்களை மட்டும் அழிப்பதாயிருந்தால், தனவான்கள் உடனே மற்றொன்று தேடிக் கொள்வார்கள். ஆதலால் சிலவற்றை அழிப்பதில் பயனில்லை என்றான்.

அவனிஷ்டப்படியே அந்தக் காரியம் நிறைவேறிற்று. அவன் சொன்னவுடனே அந்த தெய்வப்பெண் தன் கையிலிருந்த மந்திரத் தடியை வீசினாள். உடனே இவ்வுலகம் மாறிப் போனவிதம் அறிவீர்களா? மிகச் சிறந்த விசித்திரமான மாளிகைகளெல்லாம் அற்பமான கூரைக்குடிசைகளாயின. முத்துசாமியின் யஜமானனுடைய மாளிகை இருந்தவிடந்தெரியாமல் ஒரு சிறு குடிசையாய்ப் போயிற்று. சிறந்த ஆடையாபரணங்களெல்லாம் கந்தைத்துணியும் கிலை மணிகளுமாயின; பூஞ்செடிகளெல்லாம் புற்களாயின; உயர்ந்த பழத்தோட்டங்களெல்லாம் அற்பமான காட்டுச் செடிகளாயின. இப்படி யாவும் மாறிப் போனதுகண்டு முத்துசாமி மிகக் களிப்படைந்து அந்த தேவதையைத் துதி செய்யத் துவக்கினான். அது கண்டு அந்தத் தேவதை, இப்போது நீ என்னைத் துதிசெய்தது போதும்; இன்னும் ஒரு வாரம் கழித்து என்னிடம் வா; அப்போது நான் செய்த உபகாரத்தை நீ நிதானமாக யோசித்துத் துதி செய்யலாமென்றாள்.

ஆயினும், முத்துசாமி தான்நினைத்தகாரியம் கைகூடிற்றென்று மிகக் களிப்படைந்து அந்தச் சந்தோஷச்செய்தியைத் தன் மனையாளுடன் சொல்லும்படி வீட்டுக்குச் சென்றான். இச்செய்தி கேட்டு மனைவி மிகவும் உவப்படைவாளென்று அவன் ஆவல் கொண்டு அவளுடன் சொன்னானாயினும், அதைக்கேட்டு அவள் அத்தனையாகச் சந்தோஷப்படவில்லை. ஏனெனில், வெளியே போவதற்காக அவள் நல்ல வஸ்திரம் அணிந்து கொள்ளும்படி போய்ப் பார்க்கையில், அவள் வைத்திருந்த உயர்ந்த ஆடைகளெல்லாம் அற்பமான முரட்டுக் கந்தைத்துணிகளாயிருந்தன. நல்ல வீட்டுப் பாத்திரங்களெல்

லாம் அற்பமான மட்பாத்திரங்களாயிருந்தன; அதனால் அவள் மன
ங் கலங்கி முகம் வாடி நிற்பது தெரிந்து முத்துசாமி, ஆ! என்ன!
உன்னுடைகள் கூடக் காணாமற் போயினவா! என்று சொல்லிச் சிறி
துநேரம் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்று பிறகு, சற்று நேரம்
நிம்மதியாய்ப் படுத்துத் தூங்குவோம், பாயும் தலையணையும் கொண்
டுவாவென்றான். அவ்வண்ணமே அந்த நன்மனையாட்டி அதை எடு
த்துவரும்படி போய்ப்பார்த்தாள். ஐயோ! அவையெல்லாம் அழிந்து
போய் அவ்விடம் சூனியமாயிருந்தது. அது தெரிந்து முத்துசாமி
மிகவும் மனக்கலக்கமுற்று, ஆ! நான் என்ன புத்தியீனமான காரியம்
செய்தேன்! செல்வவான்களுடைய போகங்களை மட்டும் அழித்து
விடும்படி கேளாமல் பொதுவாய் யாவருடைய போகங்களையும் அழி
த்து விடும்படி வேண்டிக்கொண்டு, யானை தன் தலையில் தானே மண்
ணை வாரிப் போட்டுக் கொள்வதுபோல், எனக்கு நானே தீங்கிழைத்
துக்கொண்டேனே! என்று விசாரப்பட்டுப் பிறகு, ஒரு வாரங் கழி
த்து நான் அவ்விடம் போகவேண்டுமல்லவா? அப்பொழுது ஏழை
கள் விஷயத்தில் இந்த விதியைச் செலுத்தாமல் மன்னிக்கும்படி வே
ண்டிக் கொள்கிறேன் என்றெண்ணி அதனால் சற்று மனந்தேறி யிருந்
தான்.

ஐயோ! அந்தப் பேதைக்குடியானவனுக்கு அந்த ஒரு வார
த்திற்குள்ளேயே தான் செய்த பிழையைப்பற்றி மிகவும் பச்சாத்தா
பப்படும்படியான நிமித்தங்கள் பல நேர்ந்தன. என்னவெனில், பட்டு
வியாபாரசாலையில் வேலை செய்துகொண்டிருந்த அவனுடைய
சகோதரன் ஒருவன் மற்றுமுள்ள எல்லா வேலைக்காரர்களோடுங்
கூட வேலையினின்றும் நீக்கப்பட்டு வீடுவந்து சேர்ந்தான். பட்
டுகள் எங்கும் இல்லாமல் ஒழிந்துபோகவே, பட்டு வியாபாரி மிகவும்
விசனமுற்று வீணே வேலைக்காரர்களை வைத்துக் கொண்டு என்ன
செய்கிறதென்று அவர்களை யெல்லாம் நீக்கிவிட்டான். ஆயினும்
முத்துசாமி சீக்கிரமே நல்லகாலம் வருமென்று எண்ணங் கொண்டு
அந்த சகோதரனைத் தன் வீட்டில் அழைத்துக்கொண்டான்.

மறுநாள் அவனுடைய மூத்த மகன் தான் அதுவரையில்
செய்துகொண்டிருந்த பெரிய பெட்டி வண்டி வேலையினின்றும் நீக்
கப்பட்டு வீடுவந்து சேர்ந்தான். ஏனெனில், உயர்ந்த பெட்டி வண்
டிகளெல்லாம் கட்டைவண்டிகளாகவும் கைவண்டிகளாகவும் மாற்
றப்பட்டமையின், இனி பெட்டி வண்டிகளால் யாது பயனென்று
அந்த வியாபாரி அவ்வேலையை நிறுத்தி வேலைக்காரர்களையும் நீக்கி
விட்டான். அதுகண்டு முத்துசாமி மிகவும் விசாரமடைந்து நின்றா
னாயினும், நம்முடைய பயிர்த்தொழில் அழியாமலிருக்கிறதல்லவா?
அது ஒன்றுவது அழியாமல் தப்பியிருப்பது நம்முடைய நல்லகாலந்
தான். அதைக்கொண்டு நாம் ஒருவாறு காலங் கழிக்கலாம், தானிய

வகைகள் எவர்க்கும் இன்றியமையாத பொருளாதலால் நம்முடைய பயிர்த்தொழிலுக்கு ஒருபோதும் அழிவு வாராதென்றெண்ணி ஒருவாறு தேற்றாவு பண்ணிக்கொண்டிருந்தான்.

ஆயினும் இரண்டொரு தினத்தில் இந்தக்குடியானவனுடைய யஜமானன் இவனுடைய குடிசையண்டை வந்து முத்துசாமியைப் பார்த்து, அப்பா, நீ நல்ல யோக்கியன், உழைப்பாளி, உன்னைப் போலத் தகுந்த வேலைக்காரன் வேறொருவனுமில்லை; அப்படிப்பட்ட உனக்குக் கஷ்டகாலம் சம்பவித்ததேயென நான் மிகவும் விசாரப்படுகிறேன். இனி உனக்குக் கொடுக்க ஒரு வேலையும் என்னிடத்தில் இல்லை. இனி என் நிலங்கள் எல்லாவற்றையும் நான் பயிர் செய்யப் போகிறதில்லை. ஆனதால், நீ இன்றுமுதல் உன் வேலையை விட்டு நீங்கியிருக்கவேண்டுவதுதான் என்றான்.

அது கேட்டு முத்துச்சாமி, ஐயா, நீங்கள் சொல்வதைக் கேட்க எனக்கு மிகவும் விசனமுண்டாகிறதே! என் குடும்பம் எப்படிப் பிழைப்பதென்று நெஞ்சு கலங்குகிறதே! அப்படிப்பட்ட செழிப்பான நிலங்களையெல்லாம் பாழாகவா போட்டு விடுகிறது! யதேஷ்டமாய்த் தானியங்களும் புற்களும் பயிரிட்டு விற்கலாமே; இவையெல்லாம் இன்ப நுகர்ச்சியில் சேர்ந்தன வல்லவே என்று சொல்ல, யஜமானன், அப்படி இல்லை, சொற்ப நிலத்தில் விளைகிற தானியமே இப்போது என்னுடைய ஜீவனத்துக்குப் போதுமானது. அந்தச் சொற்ப நிலத்தைப் பிறருடைய உதவியில்லாமல் நானும் என்னுடைய பிள்ளைகளுமே பயிர் செய்து கொள்ள மாட்டுவோம். ஏன் வீணே வருத்தப்பட்டு அதிக நிலம் பயிர்செய்ய வேண்டும்? விசேஷமாய்ப் பணம் செலவு செய்து வாங்கி அனுபவிக்கத்தக்க பொருள் அதிகமாய் ஒன்றுமில்லையாதலால், மிகுதியாய்த் திரவியம் எதுக்கு? இன்றியமையாத உண்டியுடைகள் தேடிக்கொள்ள எங்களுடைய சொந்த குடும்ப உழைப்பே போதுமானது என்றான்.

அது கேட்டு முத்துசாமி ஒன்றுந்தோன்றாமல் மிகவும்விசாரமடைந்து, அந்தத் தேவதை கெடுவிட்ட ஒருவாரம் எப்பொழுது கழியப் போகிறது என்று காத்துக்கொண்டிருந்தான். மெல்ல மெல்ல அந்த ஒரு வாரம் கழிந்தது கழிந்தவுடனே அவன் அந்த மகாதேவியிடம் சென்று அவளைப் பலவாறு எத்தி யேத்தித் தொழுது, அப்போது செய்திருந்த கொடிய தீர்ப்பை உடனே மாற்றி, முன்னிருந்தபடியே அவரவர்க்கு அவரவருடைய பொருளைக் கொடுக்கவேண்டுமென வேண்டினான். அதுகேட்டு அந்தமகாதேவி மனமிரங்கி, முன் போலவே தன் மந்திரத்தடியை வீசினாள். உடனே பேதைக் குடிசைகளாயிருந்தவையெல்லாம் சிறந்த மாளிகைகளாயின. வண்டி, காடி முதலிய அவரவருடைய பொருள்களெல்லாம் உண்டா

கத் தொடங்கின. முன்பு வேலையைவிட்டு நீங்கி நின்றவர்களெல்லாம் தத்தம் வேலைக்கு ஆவலோடு எழுந்து ஓடலானார்கள். பலவாறு சொல்லி யென்ன; முன்னிருந்ததுபோலவே; எல்லாக் காரியங்களும் நடக்கத் தலைப்பட்டுக் தனவான்களுக்கு சவுக்கியம் சுக அனுபவ ஆநந்த உல்லாஸங்களும், வேலைக்காரர்களுக்கு அந்த இன்பங்களை உண்டாக்குவதிலே ஏராளமான கூலியும் சுகமாய்க் கிடைக்கும்படியாயின. வேலை இழந்தவர்களெல்லாம் மறுபடி வேலை பெற்று ஆநந்திக்க, சுகங்களை இழந்தவர்களெல்லாம் மறுபடியும் சுகங்களை அனுபவித்து உல்லாஸப் படலானார்கள்.

இதனால் முத்துசாமிக்கு மிகுந்த சந்தோஷம் உண்டானது மாத்திரமே யன்றி, நல்ல படிப்பினையும் நல்ல புத்தியும் உண்டாயிற்று. பின்பு அவனிடத்தில், திரவியமெல்லாம் தனவான்களிடத்தில் சேர்ந்து போவதுமன்றி, அதை அவர்கள் வீண் செலவு செய்வதனால் தரித்திரர்களெல்லாம் எவ்வளவு கஷ்டப்படும்படி நேரிட்டிருக்கிறதென்று எப்பொழுது யார் வந்து குறை கூறினாலும் அதற்கு அவன், தனவான்கள் தங்களுடைய சவுக்கியத்திற்காகப் பொருள் செலவழிப்பதனால் ஏழைகளுக்கு லாபமே யொழிய நஷ்டமில்லை என்று சொல்லி அதை நிரூபித்துக் காட்டத் தொடங்கிக்கொண்டான்.

இப்படியிருக்க, ஒரு நாள் கூட்டங்கூடிப் பேசும்போது பொன்னுசாமி என்பவன் ஒருவன் முத்துசாமியை நோக்கி, முத்துசாமி, தனவான்கள் தங்களுடைய திரவியத்தை இன்பநுகர்ச்சிக்காகத் திரளாய்ச் செலவழிப்பதனால் ஏழைகளுக்கு எப்போதும் லாபமே யொழிய நஷ்டமில்லை என்று நீ உறுதியாக நம்பியிருக்கிறாயா? அப்படி இல்லை என்று நான் என் அனுபவத்தால் தெரிந்துகொண்டிருக்கிறேன். நான் ஒரு யஜமானிடத்தில் வேட்டைத் தோழனாகச் சேவித்துக் கொண்டிருந்தேன். வாலிப வயதான அந்த யஜமானனுடைய வீண் செலவுக்கு மட்டு மிதமேயில்லாமலிருந்தது. கடைசியில் அவர், கையில் ஒரு காசுகூட இல்லாமல் எல்லாப் பொருளையும் வீண் செலவுசெய்து, தானும் பக்கிரியாய்ப் போய்த் தன்னைச் சேர்ந்த பல வேலைக்காரர்களையும் தள்ளிவிட்டு வருந்தச்செய்தார். இந்தத் திருஷ்டாந்தப்படி, போகங்கள் அளவுக்கதிகமானதனால் நமக்கு வேலை போய்விட்டதா, போகங்கள் சிறிது மில்லாமையால் வேலை போய்விட்டதா? இவ்விஷயத்தை நான் தீரத்தெளிவாய்த் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் என்றான். அதைக் கேட்டபோது அதில் ஏதோ கொஞ்சம் உண்மை யிருக்கிறதென்றே முத்துசாமிக்குத் தோன்றியது. ஆயினும், அதன் சொரூபம் இப்படிப்பட்டதென்று முற்றும் தெளிவாய் அவனுக்குப் புலப்படவில்லை. பின்னும் பொன்

னுசாமி சொல்லியதாவது:—தனவான்கள் யாவரும் தங்கள் பொருள்களை முற்றும் வீண்செலவுசெய்து ஈனஸ்திதிக்கு வந்துவிடுவார்களானால், அது அத்தனையும் நம்மைப்போன்ற ஏழைகளுக்கு மிகவும் கெடுதியேயாம். தனவான்கள் விவேகசாலிகளாகித் தக்கபடி மிதச் செலவுகள் செய்து வந்தால்தான் ஏழைகளுக்கு சுகமுண்டு என்றான்.

இதைக் கேட்டு முத்துசாமி, தனவான்களுடைய வீண்செலவுகள் முதலில் அந்தத் தனவான்களுக்கே கெடுதி விளைவித்தாலல்லது ஏழைகளுக்குக் கெடுதியாக முடியாதென நன்றாய்த் தெரிந்து களிப்படைந்து வீட்டுக்குச் சென்றான். பின்பு இவ்விஷயத்தைப்பற்றி அவன் பலதரம் ஆலோசித்து, தனிகர்களுக்கு இருக்கிற சவுக்கியம் எதுவோ அதுதான் தரித்திரர்களுக்கும் இருக்கிறது. தனிகரென்று ஒரு ஏற்றமில்லை, தரித்திரரென்று ஒரு தாழ்வில்லை. ஆயின், தரித்திரர்களுடைய சவுக்கியம் தனவான்களுடைய சம்பத்தினால் வருவதென்பது ஒன்றுமாத்திரமே விசேஷமெனக் கடைசியில் உறுதியாய்த் தெரிந்துகொண்டு சுகமாயிருந்தான். என் விகடக் குஞ்சுகளே! கதையைப் படித்தீர்களா! நன்றாயிருக்கிறதா! மாமா தெரிவிக்க வந்த "தனிகரின் மேன்மையே ஏழையின் லாபம்" என்பது இப்போது விளங்கிற்றா! தெரிந்ததா! கடவுளின் இந்தப் பெரிய படைப்பிலே இப்படியே ஒவ்வொரு ஞானமும் அற்புதமாய் மறைந்து நிற்கின்றது. அதைத் தெரிந்துகொள்ளுங்கள். ஓம்! சுபம்! ஸ்ரீ! சுவாஹா!!

தென்னாட்டில் தெலுங்கு ஜாதியாராக ராஜுக்கள் வகுப்பினரும், நாயுடு செட்டி வகுப்பினர்களும் இன்னும் கோமுட்டிமார்களும் தங்களைத் தெலுங்கர் எனச் சொல்லிக்கொள்ளுகின்றனரே யன்றி இவர்களுக்கேனும் இவர்களின் மக்களுக்கேனும் தெலுங்குபாஷா ஞானமே இல்லை. சென்னையைத் தவிர மற்ற இடங்களில் தெலுங்கு பள்ளிக்கூடங்களும் அபூர்வமே.

ஒரு பெண்ணின் அன்பை மட்டுமின்றி அவள் காதலையும் அந்தரங்கத்தில் பெற்றவன் அவளது குமாரத்தியையும் மணந்து இன்புற்றான். மற்றோரிடத்தில் ஒரு பெண்ணின் அன்பை மட்டும் விரும்பி, மாமியிடம் பெண் கேட்கப்போக மாமியோ அவனைக் காதலித்து இன்புற வந்தும் அவன் தர்மநியாயங்கள் பேசித் தடுத்து யோக்கியமாக நடந்துகொள்ளக் கடைசியில் மாமியால் வெறுக்கப்பட்டுப் போனதன்றி அவனுக்குத் தன் பெண்ணைத் தரவும் மாமி மறுத்துவிட்டாள். எந்த அக்கிரமத்திற்கும் துணிந்தவர்களுக்கே தான் லாபம் போலும்.

ஏதோ ஜீவிக்கக் கற்றுக்கொண்டானது. தகப்பனார் வைத்த சொத்திருக்கிறது. இனி நமக்கு இதுவே போதும், கல்வி—படிப்பு—புஸ்தகங்கள் என்பதெல்லாம் தேகத்துக்கு அலைச்சல் தரும் சங்கதிகளானதால் அவை தேவையில்லை. நன்றாய் சிங்காரித்துக்கொண்டு வெளியே வந்துவிட்டால் அதுவே அழகு என்று சில தனவந்தர்களின் குமாரர்கள் நினைக்கிறார்கள்.

சீன தேசத்து மரியாதைகள்.

இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் அவரவர்க்கு உரியதான ஒவ்வொரு மரியாதை யுடையவர்களாய் இருக்கின்றனர். சில ஜாதியார் அந்த மரியாதைகளை ஒரு நியமம் போல ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். அவைகளைப்பற்றி வந்த வழக்கங்களும் நியாயங்களும் இப்போது அநேகமாய்ப் பழமொழிகளாக வழங்குகின்றன. ஆயினும் சில மரியாதைகளை யோசித்துப் பார்க்கையில் அவற்றின் மூலம் இன்னதென்று தெளிவாய்ப் புலப்படவில்லை. திருஷ்டாந்தமாய், ஸ்பெயின் தேசத்தில் ஒருவன் வீட்டுக்கு யாராவது ஒருவன் விருந்தினனாய்ச் சென்றபோது, அவ்வீட்டிலுள்ள பொருள் ஏதாவதொன்றைக் கண்டு அவன் வியப்பானாயின், உடனே அவ்வீட்டுக்காரன் அப்பொருளை அவனுக்குக் கொடுப்பதாகச் சொல்லி அவன் வீட்டைவிட்டுப் போகும்போது அவன் பின்னேயே அந்தப் பொருளைக் கொடுத்து அனுப்பி விடுவான். வேண்டாமென்று நீ எவ்வளவு மறுத்துச் சொன்னாலும் கேட்க மாட்டான். ஆயின், அப்பொருளை அவன் புத்தி மோசமாய் ஏற்றுக் கொள்வானாயின், அதனால் உடையவன் அவன் மேல் மிகவும் கோபங்கொண்டு எரிந்து விழுவான்.

விசனக் குறியான உடை சீனருக்கு வெளுப்பு. ஆங்கிலேயருக்குக் கறுப்பு. சீனர் வடகிழக்கைக் கிழக்கு வடக்கென்றும், தென்கிழக்கைக் கிழக்குத் தெற்கென்றும் சொல்லுகிறார்கள். மேலும் தமது பட்டப்பெயரைப்பின்னால் எழுதுகிறார்கள். அத்தேசத்தில் கிழவர்கள் காற்றாடி விடச் சிறு பிள்ளைகள் அதை வேடிக்கை பார்ப்பார். பிள்ளைகள் பாடம் ஒப்புவிப்பதென்றால், உபாத்தியாயருக்குப் பின்புறமாய்த் திரும்பிக்கொண்டு தமக்குச் சக்தியானவளவு உரத்துக் கூவி ஒப்பிப்பார்கள்.

சீன தேசம் சென்ற ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்:—ஒரு பண்டிகை தினத்தன்று ஒரு வீட்டுக்கு எல்லோரும் வந்திருந்தனர். பண்டிகையைப்பற்றிய சடங்குகளெல்லாம் முடிந்த பின் வந்தவர்கள் எல்லோரும் எழுந்து தங்கள் தங்கள் வீட்டுக்குப் போகப் புறப்பட்டார்கள். அப்போது அவ்வீட்டுக்குடையவன் வீட்டு வாயிலிலே போய் நின்று, ஒருவரும் எழுந்து வெளியே போகக்கூடாது; இன்றையதினம் யாவர்க்கும் நான் என் வீட்டில் விருந்து அளிக்கப் போகிறேன்; எல்லோரும் இப்படியே நின்று விருந்துண்டு என்னைக் கனப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளுகிறேன் என்று சொல்லி அங்குள்ளவர் அனைவரையும் தனித்தனி மறுத்து வேண்டிக்கொண்டான். அதற்கு ஒவ்வொருவரும் தமக்கு ஏதோ ஒரு அவசியமான காரிய மிருக்கிறதென்று சாக்குச் சொல்லிச் செலவு பெற்றுக்கொண்டு போய் விட்டார்கள். கடைசியில் அவனுடைய சிற்றப்பன் மகன் ஒருவன் எழுந்து போனான். அவனைக் கண்டு, நீ கூட எழுந்து போய்விடுகிறாயா? இவர்களெல்லோரும் ஏதோ காரியம் வந்ததால் புறப்பட்டுப் போவதாய்ச் சொன்னாலும், நம்முடைய சொந்த மனிதனாயிருந்து நீ கூடப் போய் விடலாமா? கூடாது கூடாது! அவசியம் நீ என்னுடன் விருந்துண்டு போகவேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அதற்கு அச்சிறுவன், இல்லை யில்லை; இப்போது நான் இங்கே நிற்பதற்கில்லை; நிர்ப்பந்தமாய்ப் போக வேண்டிய வேலையொன்று இருக்கிறது.

இந்தத் தடவை மன்னிக்க வேண்டுமென்று வருந்திச் சொல்ல, அவன்: அப்படியாயின் நீ என் வீட்டில் அதிக நேரம் நின்றிருக்க வேண்டாம்; கொஞ்சம் பலகாரமாவது சாப்பிட்டு விடாயைத் தணித்துக் கொண்டு போ; அதற்கு எவ்வளவு நேரம் செல்லும்? என்று சொல்லி நிர்ப்பந்தித்தான்.

அதன்மேல் அச்சிறுவன் ஒன்றும்மறுத்துரைக்க முடியாமல் அப்படியே வருவதாய் ஒப்புக்கொண்டான். இருவருமாய் வீட்டிற்குள் சென்றார்கள். சென்று ஆசனங்களில் உட்கார்ந்து சிறிது நேரம் என்னவோ பேசிக்கொண்டிருந்தார்கள். எந்நேரம் பேசிக்கொண்டிருந்தும் பலகாரமும் வரவில்லை, போஜனமும் வரவில்லை. அது கண்டு அந்த விருந்தாளி "நேரமாகிறதே நான் சீக்கிரமாய்ப் போக வேண்டுமென்று முன்னமே சொன்னேனே! பலகாரம் கொண்டு வா எந்நேரம் என்று கேட்க, வீட்டுக்காரன், "யார் உள்ளே! என் தாமதப்படுத்துகிறீர்கள்? இவன் அவசரமாய் எங்கேயோ போக வேண்டுமாம். வெகு நேரமாய் காத்திருக்கிறானே. ஏன் இன்னும் ஒன்றும் எடுத்துக் கொண்டு வராதிருக்கிறீர்கள்" என்று கூவினான்.

அவன் எந்நேரம் கூவினாலும் அதற்கு விடை கொடுப்பார் ஒருவருமில்லை. பிறகு வீட்டுக்காரன், பலகாரம் செய்யச் சற்று தாமதப் பட்டதோ என்னவோ? இதோ நான் போய்வாங்கி வருகிறேன் சற்றே பொறுத்திரு என்று கூறியதற்கு விருந்தாளி, பலகாரம் இல்லாமற் போனால் போகட்டும், ஏதாவது பழமிருந்தால் அதையாவது புசித்துக் கொஞ்சம் பானகம் சாப்பிட்டுப் போய்விடலாம் எனக்கு நிற்க நேரமில்லை என்று சொல்ல, அவன், பழமாயினும் பானகமாயினும் என் உடம்புக்கு ஒத்துக் கொள்வதில்லை யாகையால் அவைகளை வீட்டில் வாங்கி வைத்திருக்க மாட்டார்கள் என்று சொன்னான்.

அது கேட்டு அச்சிறுவன், அப்படியாயின், நீர் என் இந்நேரம் என் வேலைகளை யெல்லாம் கெடுத்து, என்னை இவ்விடத்தில் மடக்கிப் போட்டீர். நான் வீட்டிற்குப் போயிருந்தாலும் எந்த வேலையாவது தீர்ந்திருக்குமே என்று கூற, அதற்கு வீட்டுக்காரன் மிக்க கோபம் கொண்டு அடா, அற்பப் பயலே! நீ எவ்விடத்தில் மரியாதைகளைக் கற்றுக் கொண்டு வந்தாய்? உன் நடத்தையைப் பார்த்தால் நீ சீன தேசத்தில் பிறந்தவனாகக் காணப்படவில்லையே! துருக்கி தேசத்தில் பிறந்தவனா? என்ன? நான் மரியாதையாய் வீட்டுக்கு வாவென்று அழைத்தால் வருவதற்கு இப்போது அநுகூலப் படவில்லையென்று சொல்லி "எதிர் மரியாதை" செய்ய உனக்குத் தெரியவில்லையே என்று அதட்டித் திட்டினான். அம்மகன் மிகவும் வெட்கப்பட்டு ஒன்றும் பதில் சொல்லத் தோன்றாமல் வாயை மூடிக்கொண்டு தலை குனிந்து நின்றான். பிறகு விருந்துண்ண வந்த சிறுவன் நான் தெரியாமல் வந்துவிட்டேன்; இக்குற்றத்தை மன்னிக்க வேண்டும் என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு போய்விட்டான். இப்படியும் ஒரு அநியாயச் செய்கை உண்டா? பிறரை உபசரிப்பதில் இவ்வளவு பொய் வார்த்தைகளா? இவ்விதமாகச் சீன தேசத்தில் எவர்க்கும் ஒரு காசு செலவில்லாமல் யாவரும் எல்லோரையும் விருந்தளிக்க வரவழைப்பதும், அப்படி அழைக்கப்பட்டவர்கள் இப்போது வருவதற்கு அனுகூலப் படவில்லையென்று சொல்லி வராமற் போய்விடுவதுமே பெரிய மரியாதையாயிருக்கின்றது.